# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • ஏப்ரல் 23, 2022 Weekly E-paper • April 23, 2022


# ஹெச்.ராஜா திராவிடரா?

சுப.வீரபாண்டியன்



## விநாயகர் சதுர்த்திக்குப் பிறகு ராம நவமியா?

விடுதலை ராஜேந்திரன்

## அனைத்து அழிக்கும் ஆரியம்!

தலையங்கம்

## இன்ப நாளிது! இதயம் பாடுது!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 23, 2022 Weekly E-paper ● April 23, 2022


# ஹெச்.ராஜா திராவிடரா?

**சுப.வீரபாண்டியன்**

சில நாள்களுக்கு முன்பு ஹெச். ராஜா திடீரென்று ஒரு புது அவதாரம் எடுத்துள்ளார். நானும் திராவிடன்தான், மோடியும் திராவிடன்தான் என்று பேசியிருக்கிறார்.

இத்தனை காலம் திருட்டுத் திராவிடம் என்று சொன்னவர்கள், திராவிடத்தை அழிப்பதே எங்கள் நோக்கம் என்றவர்கள், இப்போது திடீரென்று நாங்களும் திராவிடர்கள்தான் என்று சொல்கின்றனர் என்றால், அது ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதற்குள் ஒரு நுட்பமான சதி இருக்கிறது!

எதிர்த்து அழிக்க முடியாதவர்களை, உள்வாங்கிச் செரிப்பது என்பது எப்போதும் அவாளின் பழக்கம் என்பதை நாம் அறிவோம்! அதனைத் 'திரிதராஷ்ட்ர ஆலிங்கனம்' என்று அவர்கள் குறிப்பிடுவது வழக்கம்.



ஹெச். ராஜா இப்படிச் சொன்னவுடன், தமிழ்த் தேசியக் குஞ்சு, குளுவான்கள் எல்லாம் துள்ளிக் குதிக்கின்றனர். திராவிடர் என்றால் பார்ப்பனர்கள் உள்ளே வர மாட்டார்கள் என்றாரே பெரியார், இப்போது வந்து விட்டார்களே. என்ன செய்யப் போகிறீர்கள் என்பது போல் ஒரே கூச்சல்!

இரண்டு பேரும் பேசிவைத்துக் கொண்டு நடிக்கும் நாடகம் இது என்பது கூடவா எங்களுக்குப் புரியாது?

இந்தப் 'பஞ்ச திராவிடன்', 'ராகுல் திராவிட்' போன்ற கதைகளையெல்லாம் முதலில் அவிழ்த்து விட்டதே உங்கள் 'தமிழ் இந்து' தானே! இப்போது அதனையே ஹெச். ராஜா சொல்கிறார், அவ்வளவுதான்!

தங்களைத் திராவிடன் என்று சொல்லிக்கொள்ள வேண்டிய தேவை அல்லது வஞ்சகம் ஏன் அவர்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது? வேறொன்றுமில்லை. திராவிடம் என்பது பாப்பன எதிர்ப்பு என்னும் உண்மையை உடைத்து விட்டால், திராவிடத்தின் மீதுள்ள நம்பிக்கை குறைந்துவிடும் என்று கருதுகின்றனர். அதனால்தான் இந்தப் பாசாங்கு!

சரி, நாமும் அதனை ஏற்றுக் கொள்வோம். அவர்கள் திராவிடர்களாகவே இருக்கட்டும். அப்படியானால். ஒரு பொது இடத்தில் அவாள் தங்கள் பூணூலை அறுத்து எறிந்துவிட்டுத் தங்களைத் திராவிடன் என்று சொல்லிக் கொள்ளட்டும். தங்கள் வீடுகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு இனிமேல் திராவிடச் செல்வன், திராவிட மங்கை, திராவிட மணி என்ற பெயர்களைச் சூட்டட்டும்! (என் பேச்சின் பின்னூட்டத்தில் ஒரு பேராசிரியர் சொல்கிறார், பிள்ளைகள் பிறக்கும் வரை ஏன் காத்திருக்க வேண்டும், இப்போதே ஹெச். ராஜா தன் பெயரைத் திராவிட ராஜா என்று மாற்றிக் கொள்ளட்டும் என்கிறார். அதுவும் சரியாகத்தான் இருக்கிறது!)

ஒரு நேர்காணலில், ஒருவர், 'ஹெச். ராஜா இப்படிச் சொல்லிவிட்டாரே, என்ன செய்யப் போகிறீர்கள் என்று வீரமணியிடமும், ஸ்டாலினிடமும் போய்க் கேளுங்கள்' என்கிறார். இதிலிருந்தே இவர்களின் கூட்டணி அம்பலப்படுகிறது!

எங்கள் தலைவர்களிடம் ஏன் கேட்க வேண்டும்? திராவிடத்தின் மீது ஏன் திடீர்ப் பற்று என்று ஹெச். ராஜாவைக் கேளுங்கள்! ஆரியம்-திராவிடம் என்பதெல்லாம் குப்பைக் கூடைக்கு உரியது என்று அம்பேத்கர் சொல்லிவிட்டார் என்று ஒவ்வொரு மேடையிலும் பேசினீர்களே, இப்போது ஏன் அந்தக் குப்பைக் கூடைக்குள் போய் ஏன் ஒளிந்து கொள்கின்றீர்கள் என்று அவரையே கேளுங்கள்.

சரி, அம்பேத்கார் திராவிடம் பற்றி அப்படிச் சொன்னாரா? அதுவாவது உண்மையா? இதோ... அம்பேத்காரின் எழுத்துகளும், பேச்சுகளும் – தொகுதி 14 – பக்கம் 87 இல் அண்ணல் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அப்படியே கீழே தருகிறேன்:-

"திராவிடர்கள், நாகர்கள் என்பது ஒரே மக்களின் வேறு வேறு பெயர்களே என்பதை ஒப்புக்கொள்ள வெகு சிலரே தயாராக இருப்பர் என்பதை மறுக்க முடியாது. அதே போன்று திராவிடர்கள், நாகர்களாகத் தென் இந்தியாவில் மட்டுமின்றி, இந்தியா முழுவதிலும், தென் இந்தியாவிலும், வட இந்தியாவிலும் பரவியிருந்தனர் என்பதையும் சிலரே ஒப்புக்கொள்வர். ஆயினும் இவை வரலாற்று உண்மைகள் என்பதில் ஐயமில்லை"

இப்போது சொல்லுங்கள், கேள்விக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்கள் யார்? போலித் தமிழ்தேசியர்கள், தங்களின் எஜமானர்களிடம் கேள்வி கேட்க மாட்டார்கள். எனவே நாம் கேட்போம் –

"நேற்று வரையில் திருட்டுத் திராவிடம் என்று பேசிய நீங்கள், இன்று நானும் திராவிடன் என்று பேசுகின்றீர்களே, உங்களுக்கு வெட்கம், மானம் என்பதே கிடையாதா?

●

# வன்முறை

# விநாயகர் சதுர்த்திக்குப் பிறகு ராம நவமியா?

**தோழர் விடுதலை ராஜேந்திரன்,** பொதுச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்



**பா.ஜ.க. ஆளும் பல்வேறு மாநிலங்களில் தொடர்ந்து மதக் கலவரங்கள் உருவாக்கப்படுவது பற்றி தங்கள் கருத்து ?**

இந்து மதத்தின் அடிப்படையில் வாக்குகளை அணி திரட்டுவது என்பது பாஜக தொடர்ச்சியாக செய்து கொண்டுவரும் நடைமுறைதான். ஆனால் அண்மைக் காலங்களில் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகள் மக்களுக்குப் பெரிய அளவில் நெருக்கடியைத் தந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பெட்ரோல் - டீசல் - சமையல் எரிவாயு விலை உயர்வு, விலைவாசி உயர்வு, வேலை வாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகள் அதிகமாகிக் கொண்டிருக்கும் வேளையில் பாஜக நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்தப் பிரச்சனைகளால் மிகுந்த நெருக்கடியைப் பாஜக சந்தித்துக் கொண்டிருப்பதால், மதத்தின் அடிப்படையில் இந்துக்களை அணிதிரட்டி இஸ்லாமியர்களைத் தனிமைப்படுத்தி, இந்துக்களுக்கு எதிரி இஸ்லாமியர்கள் என்கிற அணிதிரட்டலை உருவாக்கலாம் என்று திட்டமிட்டு முயற்சித்து வருகிறார்கள்.

ராமநவமி ஒவ்வொரு ஆண்டும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆண்டு ராம நவமியில் இவ்வளவு பெரிய கலவரத்தை நடத்துவது, தமிழகத்தின் எல்லையில் அனுமாருக்குச் சிலை வைப்பது, இவற்றை எல்லாம் பார்க்கும்போது மதத்தின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டும் நிகழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

மத்தியப் பிரதேசத்தில் ராமநவமி ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்திற்குப் பின்னர் இரு தரப்பினர் மீதும் வழக்குப்பதிவு செய்து கைது செய்வது என்பது இயல்பானதுதான். ஆனால் புல்டோசரை ஆயுதமாகக் கொண்டு, கூட்டுத் தண்டனை(Collective Punishment) என்று சொல்லி ஒரு சமூகத்துக் குடியிருப்பை இடித்துத் தரைமட்டமாக்கியது, அடிப்படையாக அரசியல் சட்டத்திற்கு எதிரானது. அனைவருக்கும் வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அரசியல் சட்டம் அடிப்படை உரிமையாகச் சொல்கிறது. சர்வதேச மனித உரிமை ஆணையம், உலகின் அனைத்து மக்களுக்கும் வீட்டு வசதியை உறுதிப்படுத்த வேண்டும் என்று சொல்கிறது. அரசியல் சட்டம் சொல்வதையும், சர்வதேச மனித உரிமை ஆணையம் சொல்வதையும், நீதிமன்றத் தடையையும் மீறி புல்டோசரை வைத்து வீடுகளை இடித்துத் தள்ளுவது என்ற அளவிற்கு அவர்கள் போகிறார்கள் என்றால், மதவறியை மேலும் தீவிரமாகக் கூர்மைப்படுத்துகிறார்கள்.

> “ மோடிக்கு ஒரு பிம்பம் வேண்டும் என்பதால் கலைத்துறையில் இருந்து 4-5 பேரை அழைத்து வந்து மோடியினுடைய பெருமையைப் பேச வைத்தால் மக்கள் மனதில் மாற்றம் வருமா என்று நினைக்கிறார்கள். இளையராஜாவின் இசையைத்தான் தமிழக மக்கள் ரசிக்கிறார்களே தவிர அவருடைய ஆன்மீகக் கருத்துகளையோ, அரசியல் கருத்துகளையோ தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை

இந்துக்களுக்கான அணிதிரட்டல் என்பதைப் பாஜக செய்கிறது. மோடி ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து எந்த இந்துக்களுக்கான உரிமைகளுக்காக இவர்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். ஏழை எளிய விளிம்பு நிலை இந்துக்கள்தான் இந்த நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள். இந்த ஏழைகளின் மீது பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை ஏற்றுகிறார்கள். சாதாரண ஏழை இந்துக்களைப் பற்றி இவர்கள் கவலைப்படவில்லை. அதே நேரத்தில் அதானி, அம்பானி போன்ற பணக்கார, பெரு முதலாளிகளுக்குப் பல லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்கிறார்கள். பாரத ஸ்டேட் வங்கியில் 73 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கிய கௌதம் அதானி, உலகத்தின் பத்து பணக்காரர்களில் ஒருவராக இருக்கிறார். ஏழை எளிய விளிம்புநிலை மக்களை முற்றிலும் ஒழித்து விட்டுப் பெரு முதலாளிகளுக்கும், பனியா இந்துக்களுக்கும், பார்ப்பன இந்துக்களுக்கும்தான் இவர்கள் ஆட்சி செய்கிறார்கள். இதை நாம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். இந்துத்துவாவை முன்னெடுப்பவர்கள் பணக்காரர்களுக்காகவும் பார்ப்பனர்களுக்காகவும் பேசுகிறார்கள். இந்துத்துவாவை எதிர்ப்பவர்கள்தான் ஏழை எளிய விளிம்புநிலை இந்துக்களுக்குக்காகக் குரல் கொடுக்கிறார்கள் என்ற விழிப்புணர்வை நாம் மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

**மற்ற மாநிலங்களில் மதக்கலவரங்களை பாஜக நடத்திகொண்டிருக்கும் வேளையில், தமிழகத்தில் அண்மையில் இசைஞானி இளையராஜா, இயக்குநர் பாக்கியராஜ் போன்றோர் மோடியைப் புகழ்ந்து கருத்துத் தெரிவித்திருப்பதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் காலூன்றுவதற்கு ஒவ்வொரு முயற்சியாகச் செய்து பார்த்தார்கள். ஆரம்பத்தில் 'கழகங்கள் இல்லாத தமிழகத்தை' உருவாக்குவோம் என்று சொன்னார்கள். அது முற்றிலுமாகத் தோற்றுப்போனது. இரண்டாவது அதிமுகவை இரண்டாக உடைத்து அதில் ஒரு அணியைத் தன்னுடைய கைவசம் வைத்துக்கொண்டு வளர நினைத்தார்கள். அதன்பிறகு சில பிரச்சனைகள் வந்தபின் இரண்டு அணியையும் இணைத்து வைக்க வேண்டிய ஒரு கட்டாயம் வந்து, இரண்டு அணியையும் இணைத்து, தங்கள் விருப்பப்படி அவர்கள் மூலம் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு ரஜினிகாந்தைக் கொண்டு வந்து அதன் மூலம் தாங்கள் வளர நினைத்தார்கள். ஆனால் அவர் வரமுடியாது என்று இறுதியில் சொல்லிவிட்டார். இந்த முயற்சிகள் தொடர்ந்து தோல்வி அடைந்து வருவதைப் பார்த்து, இந்த முயற்சிகளை மேற்கொண்டவர்களே தமிழ்நாட்டில் இது போன்ற முயற்சிகள் வெற்றி பெறாது என்று புரிந்துகொண்டார்கள். மக்களிடம் இந்த நிலைப்பாடுகளுக்கு ஆதரவில்லை. இப்போது அதிமுக மிகவும் பலவீனமாகிவிட்டது என்பதால் அதிமுகவைத் தனக்குக் கீழ் வைத்துக்கொண்டு, தமிழகத்தில் அதிமுக இடத்தைப் பிடித்து அரசியல் செய்யலாம் என்று தொடர்ந்து திமுகவை எதிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பாஜகவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை, எச்.ராஜா போன்று மதவாதம் பேசுவதில்லை. அது தமிழ்நாட்டில் எடுபடாது என்று புரிந்துகொண்டார்கள். திமுகவை எதிர்த்து அரசியல் செய்வதால் மட்டுமே நமக்கு விளம்பரம் கிடைக்கும், மக்கள் நம்மைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். மக்கள் மத்தியில் நம்முடைய கட்சியைப் பதிய வைக்கலாம் என்று, முழுக்க முழுக்க திமுக எதிர்ப்பு என்பதை மட்டும் குறிவைத்து அவர்கள் பயணிக்கிறார்கள். அப்படிப் பயணம் செய்யும்போது மோடிக்கு ஒரு பிம்பம் வேண்டும் என்பதால் கலைத்துறையில் இருந்து 4-5 பேரை அழைத்து வந்து மோடியினுடைய பெருமையைப் பேச வைத்தால் மக்கள் மனதில் மாற்றம் வருமா என்று நினைக்கிறார்கள். இளையராஜாவின் இசையைத்தான் தமிழக மக்கள் ரசிக்கிறார்களே தவிர அவருடைய ஆன்மீகக் கருத்துகளையோ, அரசியல் கருத்துகளையோ தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது இப்போது நன்கு தெளிவாகிவிட்டது. அதே போல் பாக்கியராஜ் அவர்களும் காலையில் மோடியைப் புகழ்ந்து பேசிவிட்டு, மாலையில் பெரியார், அண்ணா, கலைஞர், எம்.ஜீ.ஆர் என்று மாற்றிப் பேசி விட்டார். அதனால் இந்த முயற்சிகளும் தோல்வி அடைந்துவிட்டன.

நேர்கண்டவர்: மா.உதயகுமார்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அணைத்து அழிக்கும் ஆரியம்!

இந்து மதத்தை ஆட்டம் காணச் செய்தவர்கள் இருவர். ஒருவர் தந்தை பெரியார், அடுத்தவர் அண்ணல் அம்பேத்கர்.

தந்தை பெரியார் திராவிட இயக்கத்தின் ஆணிவேர். நாகர்கள் திராவிடர்கள் என்றும், திராவிடர்- தமிழர் என்பது இரண்டு சொற்கள், ஒரே பொருள் என்றும், ஆரியத்தை எதிர்த்தது திராவிட இனம் என்றும் நிறுவியுள்ளார் அறிஞர் அம்பேத்கர்.

ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க போன்ற அமைப்புகள் மூலம் திராவிடச் சித்தாந்தத்தை எதிர்த்து நின்ற ஆரியப் பார்ப்பனியம், இப்பொழுது புரிந்து கொண்டது திராவிடத்தை வெல்ல முடியாது என்று.

அதனால் தன்னுடன் சேர்த்து அழிக்கும் சூழ்ச்சியைக் கையில் எடுக்கிறது அது. இதைச் "சேர்ந்தாரைக் கொல்லி" என்பார் திருவள்ளுவர்.

நெருப்பு எந்தப் பொருளில் சேர்ந்தாலும், அந்தப் பொருள் அழிந்துவிடும். பவுத்தத்தை எதிர்த்து அழிக்க முடியாத பார்ப்பனியம்; பவுத்தத்தில் சேர்ந்து, அதைத் தன்வயப் படுத்திக் கொண்டு மூலபவுத்தத்தை ஏறத்தாழ அழித்துவிட்டது.

அது போல இப்பொழுது தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கரின் வலிமை வாய்ந்த திராவிடச் சித்தாந்தங்களை எதிர்க்க முடியாமல் அவர்களுக்கு இந்துச் சாயம் பூச முயல்கிறது ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள்.

நானும் திராவிடன்தான் என்கிறார் எச்.ராஜா. நான் இந்துவாகச் சாக மாட்டேன் என்று சூளுரைத்து, பவுத்தராக மாறிய அம்பத்கருக்குக் காவிச்சாயம் பூசத் தொடங்குகிறார்கள்.

இந்துத்துவாவின் மதத்தை எதிர்த்துப் பேசிய பெரியாரையும், எழுதிய அம்பேத்கரையும் தமிழ்நாட்டில் வாழும் பெரும்பான்மை இந்துக்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இதைத் 'திராவிட மாடல்' என்றும் சொல்லலாம்.

அதனால் சேர்ந்தாரைக் கொல்லும் சூழ்ச்சி வலையைக் கையில் எடுக்கிறது சங்கபரிவாரம். தமிழ் நாட்டில் அது எடுபடாது என்பது உண்மைதான்.

கருப்புக்கு முன்னால் காவியால் நிற்க முடியாது.


இருந்தாலும் கொஞ்சம் எச்சரிக்கையாவும் நாம் இருக்க வேண்டும் !










ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# இன்ப நாளிது ! இதயம் பாடுது!

**வெற்றிச்செல்வன்**

தோழர்களே! பேரவை நாள் குறித்த கட்டுரை எழுத முனைந்தபோது, சட்டென்று நெஞ்சம் நினைவுபடுத்திய தலைப்பு இதுதான் 'இன்ப நாளிது! இதயம் பாடுது!'. ஆம்! பேரறிஞர் அண்ணா அவர்கள் தமது தம்பிகளுக்குத் 'திராவிட நாடு' ஏட்டில் பொங்கல் நாளுக்காக எழுதிய மடலின் தலைப்புதான் அது!

ஒன்றிய அரசோ ஒன்றுக்கும் உதவாத தனது கொள்கைகளைத் திணிக்கும் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறது; நாடு முழுவதும் மதத்தின் பேரால் நாச வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; மக்களைப் பிளவுபடுத்தும் சக்திகள் மள மளவெனப் பெருகிக் கொண்டிருக்கின்றன; இந்த நேரத்தில் இன்ப நாள் என்ன வேண்டிக்கிடக்கிறது என்று நீங்கள் கேட்கலாம் !

உண்மைதான்! நீங்கள் சொல்வது எல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை!

முன்னெப்போதையும் விட இப்போதுதான் கடுமையாகப் போராட வேண்டிய சூழல் இருக்கிறது. பார்ப்பனியப் பேராபத்து படுமோசமாகச் சூழ்ந்து நிற்கிறது.

ஆனாலும் இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடும் களத்தில் நமது பேரவை சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நமது பேரவையில் இணைந்து வருகின்ற இளைஞர் கூட்டம் பேரவைக்கு வலிமை சேர்த்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமன்று !

"தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழனுக்குத்

தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!"

என்று பாடிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாளில் (ஏப்ரல் 29) பேரவை நாளைக் கொண்டாடுகிறோம் நாம்.

இதோ.....! 90 வயதிலும் தமிழர் தலைவர், நமது ஆசிரியர் அவர்கள், தமிழர் உரிமை மீட்க நெடும்பயணம் மேற்கொள்கிறார். நெடுங்குன்றம் என்ன, இமயமலையே தடையாக வரினும் ஆசிரியரின் போர்ப்பரணி நிற்காது. தமிழருக்காக ஒரு தலைவர் இந்த வயதிலும் இயங்கி வருகிறார் என்ற நம்பிக்கை நமக்கு !

இன்னொரு பக்கம், நமது அருமை முதல்வரோ பெரியாரை, பெரியாரின் கொள்கைகளைக் கொண்டு செல்வதில் அருமைத் தலைவர் கலைஞரோடு போட்டியிடுகிறார். மூச்சுக்கு முன்னூறு முறை "திராவிடம்! திராவிடம்" என்று முழங்குகிறார். ஆரியம் அச்சம் கொள்கிறது. நமக்கோ

"நான்தான் திராவிடன் என்று நவில்கையில்

தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!"

என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. நாம் இன்பம் கொள்ள, நமது இதயம் அகமகிழ இவை மட்டுமா இருக்கின்றன ?

'முதல்வரின் அருகமர்ந்து நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டாரே பேராசிரியர்' என்று தோழமை அமைப்புகள் நம்மிடம் பேசும்போது, பெருமை மேலிடுகிறது. இதழோரம் சிறு புன்னகைகூட வருகின்றது, இல்லையா ?

ஆனால் அதனால் மட்டுமா நமக்குப் பெருமை? நாளுக்கு நாள் நமது பேரவை ஆற்றி வரும் பணிகள் அல்லவா நமது உழைப்புக்கும் நமது கொள்கைக்கும் பெருமை !

ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய பணியைச் செய்யும் நமது திராவிடப்பள்ளி.

பகுத்தறிவைப் பரவலாக்க நமது கருஞ்சட்டைப் பதிப்பகம்.

புத்தக வாசிப்பை ஓர் இயக்கமாக்கிட நமது இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்.

நடப்பு அரசியலை வாரம் ஒரு முறை அலசும் நமது கருஞ்சட்டைத் தமிழர் மின்னிதழ்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கான கல்வி உதவித் திட்டம்.

இப்படி அடுக்கடுக்கான செயல்பாடுகளால் பேரவை தனது கிளைகளை விரித்துக் கொண்டே செல்கிறதே! இவ்வளவையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக வழிநடத்திச் செல்கிறாரே, நமது பொதுச் செயலாளர் ! இவையெல்லாம்தான் நாம் பெருமை கொள்வதற்கும், பேரானந்தம் அடைவதற்குமான காரணங்கள்!

என்றாலும்…………………. நாம் கவனத்துடன் இருக்க வேண்டிய காலமிது.

'ஆட்சி அறியாத ஆரியர்கள் ஆளவந்தால்

பாட்டாளி மக்களெல்லாம் பாம்பென்றே அஞ்சாரோ?

மிக்க மதவெறியர் மேல்நிலையை எய்தி விட்டால்

தக்க முஸ்லிமைத் தாக்கா திருப்பாரோ?"

என்ற புரட்சிக்கவிஞரின் வரிகள் இன்றைக்கும் எவ்வளவு கச்சிதமாகப் பொருந்துகின்றன.

அதனால்தானோ என்னவோ, திராவிட இயக்கக் கவியரசரான பாரதிதாசன் சிலை ஆளுநர் மாளிகையில் வைக்கப்படுவதில்லை! குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் அல்லவா? ஆனால், இந்த இக்கட்டான சூழலில் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் பாரதிதாசன் சொல்கிறார், அடுத்த வரிகளில்…!

"உங்கள் கடமை உணர்வீர்கள் ஒன்றுபட்டால்

இங்கே எவராலும் இன்னல் வருவதில்லை !

சாதிமதம் பேசித் தனித்தனியே நீரிருந்தால்

தோதுதெரிந்து ஆரியர்கள் உம்மைத் தொலைத்திடுவார் !"

ஆம்! நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டிய நேரமிது. ஒற்றுமையுடன் இருக்க வேண்டிய நேரமிது. நம்மைப் பிரிக்க ஆரியம் மேற்கொள்ளும் அத்தனை வழிமுறைகளையும், தமிழராக ஒன்றுபட்டுத் தோற்கடிப்போம். திராவிடம் எனும் சமூக நீதிச் சித்தாந்தத்தைப் பாதுகாப்போம். நமது பேரவை நாளில் நாம் கொள்ள வேண்டிய உணர்வு இதுவே…….!

## திராவிடம் அவர் மூச்சு !

**வெற்றிச்செல்வன்**

*(பேராசிரியர் சுபவீ அவர்களுக்குப் பிறந்த நாள் (ஏப்ரல் 22) வாழ்த்துகள்)*

தமிழர்தம் உரிமை வாழ்வில்
தடைக்கற்கள் வந்த போது
தமிழருக் காக இங்கே
தனியதோர் இயக்கம் கண்டார்
அமிழ்துதான் அவர்தம் உள்ளம்
அறிவுதான் அவர்தம் சொத்து
உமிழ்ந்திடும் சொற்கள் வேட்டு!
ஆரியம் அலறும் கேட்டு!
தென்றலாய்ப் பேச்சு! இன்பத்
திராவிடம் அவரின் மூச்சு!
அன்றிலாய்த் தமிழ்நா டெங்கும்
அலைகடல் போல நாளும்
குன்றுபோல் உள்ளம் கொண்டு
குலைந்திடா உணர்வு கொண்டு
சென்றுசேர்த் திட்டார் தந்தை
பெரியாரின் கொள்கை யூற்றை.
மனிதத்தின் நண்பன்! கெட்ட
மதங்களைச் சுடும்நெ ருப்பு
இனிமையாய்ப் பேசி எந்தக்
கருத்தையும் கொண்டு சேர்க்கும்
மனிதனாய், மாண்பு தன்னின்
சிகரமாய் என்றும் வாழி!
இனிமையைக் கூட்டும் நாட்கள்
நீளட்டும் நீடு வாழி!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian